தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140
www.tsch.org.au **homebushtsch@gmail.com**

அரையாண்டுப் பரீட்சை 2026

ஆண்டு: 7 திகதி: 13.06.2026

நேரம்: 2:00 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்

ஆசிரியர்: திருமதி மங்கையற்கரசி விஜயகுமார்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	வினா புள்ளி	**பெற்ற புள்ளி**
வினா 1	15	
வினா 2	20	
வினா 3	15	
வினா 4	15	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

ஒலிபரப்பப்படும் உரையை கவனமாகக் கேட்டு, கேள்விகளுக்கு விடை எழுதுக.

இல	வினாக்கள்	குறிப்புகளை இங்கே எடுக்கவும்.
01	இக் கதையின் தலைப்பு என்ன? _____ _____	
02	கணேஸ், விடுமுறைக்கு எங்கே அழைத்து செல்லுமாறு பெற்றோரிடம் கேட்கிறான்? _____ _____ _____ _____	
03	சுமதி கிராமத்து வீட்டை எவ்வாறு வர்ணிக்கிறாள் என்பதை விளக்குக. _____ _____ _____ _____ _____	
04	கணேஸ், தாத்தா பாட்டியிடம் அழைத்து செல்லுமாறு கேட்டதற்கு அப்பா (சாரங்கன்) என்ன காரணங்களை கூறி மறுப்பு தெரிவித்தார்?	

	_____ _____ _____ _____ _____	
05	சாரங்கனின் மண்டையில் உறைக்கும்படி கணேஸ் அப்படி என்ன கூறினான்? _____ _____ _____ _____ _____	

வினா இல	2	**புள்ளிகள்**	20	**பக்கம்**	4

பூர்வீக மரபுகளின் முக்கியத்துவம்

பூர்வீக மரபுகள் என்பது ஒரு சமூகத்தின் அடையாளமும் பெருமையும் ஆகும். பூர்வீகம் என்றால் தலைமுறை, தலைமுறையாக நமது முன்னோர்கள் வாழ்ந்த இடம். அவர்கள் கடைபிடித்து வந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், மொழி, உணவு முறைகள், உடை அலங்காரம் ஆகிய அனைத்தும் மரபுகளாக நமக்கு வந்துள்ளன. இம்மரபுகள் நம் வாழ்க்கைக்கு ஒழுக்கத்தையும் ஒற்றுமையையும் அளிக்கின்றன. மேலும் இவை நம் பண்பாட்டின் செழுமையையும் வெளிப்படுத்துகின்றன.

இன்றைய நவீன உலகில் பல புதிய மாற்றங்கள் வந்துள்ளன. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதர்களின் வாழ்க்கை முறை வேகமாக மாறி வருகிறது. இருப்பினும், நம் பூர்வீக மரபுகளை மறக்காமல் பேணிக் காக்க வேண்டும். ஏனெனில், மரபுகளைப் பேணுவது நம் அடையாளத்தை பாதுகாப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். மரபுகளை மதிக்கும் போது, நம்மை முன்னோர்களுடன் இணைக்கும் உறவு வலுப்பெறும்.

மேலும் மரபுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு நமக்குள்ளது. குழந்தைகளுக்கு மரபுகளின் முக்கியத்துவத்தை சொல்லிக் கொடுத்து, அவற்றை நடைமுறையில் கடைபிடிக்கச் செய்வது அவசியம். இதன் மூலம் நம் கலாசாரம் நீண்ட காலம் நிலைத்திருக்கும். ஆகவே பூர்வீக மரபுகளை மதித்து பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

2.1 பூர்வீகம் என்றால் என்ன என்பதை எவ்வாறு உமது பார்வையில் வரையறை செய்வீர்?

_____

_____

2.2 பூர்வீக மரபுகள் எவ்வாறு எமக்கு வந்துள்ளன?

_____

_____

2.3 எமது வாழ்க்கையில் மரபுகள் எந்த இரண்டு நன்மைகளை அளிக்கின்றன?

_____

_____

2.4 தொழில்நுட்ப வளர்ச்சி மனித வாழ்க்கையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது?

_____

_____

2.5 மரபுகளைப் பேணிக் காக்க வேண்டிய காரணங்களை விளக்குக?

_____

_____

2.6 உங்கள் வீட்டில் கடைபிடிக்கப்படும் 2 (இரண்டு) மரபை விவரிக்கவும்

_____

_____

2.7 உங்கள் பரம்பரை பற்றிய தகவல்களை எவ்வாறு பெறுவீர்கள்

_____

_____

2.8 **பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக**

1. இடம்பெயர்தல் - .....

2. பரம்பரை - .....

3. நண்பர்கள் - .....

(புள்ளிகள் 3)

2.9 சொற்களை பிரித்து எழுதுக

1. இனக்கலவரம் - ..... + ...

2. மொழியாற்றல் - ..... + ...

3. புகழிழந்தான் - ..... + ...

(புள்ளிகள் 3)

வினா இல	3	**புள்ளிகள்**	15	**பக்கம்**	6


பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவுசெய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

விருப்பம் 1: இம்முறை, பாடசாலை விடுமுறையின் போது நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் எண்ணெய் (பெற்றோல்,டீசல்) பற்றாக்குறையினால், நீங்கள் வெளியிடங்களுக்கு விடுமுறை கழிக்கச் செல்ல முடியாத நிலையைப் பற்றி விபரித்து தாய்நாட்டில் உள்ள உமது உறவினருக்கு எழுதி, "அவரும் இதே பிரச்சனையை எதிர்கொண்டாரா? " என்று உங்கள் மனதில் ஏற்படும் வினாவையும் குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

விருப்பம் 2: உங்களுக்கு தாய்நாட்டில் ஒரு தோழன் அல்லது தோழி இருப்பதாகக் கருதிக் கொள்ளுங்கள். உங்கள் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கலைவிழா பற்றி அவருக்கு எழுதி, "அவருடைய பாடசாலையிலும் இதேபோல் கலைவிழா நடைபெறுகிறதா? " என்று உங்கள் மனதில் ஏற்படும் வினாவையும் குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதுக.

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	8



4.1 ஆஸ்திரேலியா கொடி எதனைக் குறித்து நிற்கிறது?

_____

_____

_____

4.2 பூர்வீகக் கொடியின் நிறங்களை குறிப்பிட்டு, அவை எதனை குறித்து நிற்கிறது என்பதை விளக்குக.

_____

_____

_____

4.3 பூர்வீகக் குடியினரின் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது?

_____

_____

4.4 ஆஸ்திரேலியா ஏன் ”பல்கலாச்சார நாடு” என அழைக்கப்படுகிறது?

4.5 பொது நிகழ்ச்சிகளில் பூர்வீகக் குடியினருக்கு நன்றி செலுத்தி வருகிறோம். ஏன்? விளக்குக.

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	10

பின்வரும் வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதுக.

5.1

- இளையன் பாடசாலைக்கு சென்றான்.
- அவன் போட்டியில் கலந்து கொண்டான்.
- அவன் முதல் பரிசு வென்றான்.

விடை:

_____

_____

_____

5.2

- கலையரசி வீட்டிலிருந்து புறப்பட்டாள்.
- அவள் நூலகத்திற்குச் சென்றாள்.
- அவள் அங்கு பல புத்தகங்களைப் படித்தாள்.

விடை:

_____

_____

_____

5.3

- எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
- இதனால் வாகன போக்குவரத்து குறைவடைந்துள்ளது.
- மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

விடை:

_____

_____

_____

5.4

- ஆசிரியர் பாடத்தை விளக்கினார்.
- மாணவர்கள் கவனமாகக் கேட்டனர்.
- அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

விடை:

_____

_____

_____

5.5

- மழை மிகவும் பலமாக பெய்தது.
- சாலைகள் நீரால் நிரம்பின.
- மக்கள் பயணம் செய்ய சிரமப்பட்டனர்.

விடை:

_____

_____

_____

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	12

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

விருப்பம் 1: நீங்கள் பூர்வீகத்திற்கு சென்று வந்த பயண அனுபவத்தை பற்றி விபரித்து எழுதுக.

(இதில் ஊரின் சிறப்புகள், சந்தித்த உறவினர்கள், அங்குள்ள கலாச்சார பழக்கங்கள், உங்களை கவர்ந்த விடயங்கள்)

அல்லது

விருப்பம் 2: நீங்கள் சமீபத்தில் பயணம் சென்று வந்த அனுபவத்தை பற்றி ஒரு கட்டுரை எழுதுக

(அவ்வூரின் சிறப்புகள், சந்தித்த மக்கள், அவர்களின் கலாச்சார பழக்கங்கள் மற்றும் உங்களை கவர்ந்த விடயங்கள்)

அல்லது

விருப்பம் 3: 1728ம் ஆண்டு கேப்டன் குக் (Captain Cook) ஆஸ்திரேலியாவிற்கு வருகை தந்த பின்னர் ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட மாற்றங்களும் - பூர்வீகக் குடியினரின் தாக்கமும்

அல்லது

விருப்பம் 4: நீங்கள் விரும்பி உண்ணும் பாரம்பரிய உணவும் - அதன் செய்முறையும்